
# 6 வேலை உலகுக்கு ஆயத்தமாவோம்

சமூக அங்கத்தவர்களின் நன்மை கருதி மேற்கொள்ளப்படுகின்ற சகல மனித நடவடிக்கைகளும் வேலையுலகிற்குள் உள்வாங்கப்படுகின்றன. சமகாலத்து விஞ்ஞான தொழினுட்பத்திறன்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்துடன் வேலையுலகும் விரைவாக வியாபித்துக் காணப்படுகின்றது. நாளுக்கு நாள் வியாபித்துச் செல்கின்ற இந்த வேலையுலகினுள் உங்களுக்கென்று எதிர்காலத்தில் ஓரிடம் ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தினை மிகவும் பயனுடையதாக்கிக் கொள்வதற்கு உங்களுடைய விருப்பம், நோக்கம் என்பன போலவே பாடசாலை மற்றும் சுற்றுச் சூழலிலிருந்து நீங்கள் பெற்றுக் கொண்ட ஆற்றல்கள் என்பனவும் பங்களிப்புச் செய்கின்றன. ‘‘ஏதோ ஒரு தொழில்’’ என்ற நிலையன்றி உங்களது ஆற்றல்கள், ஆர்வம் என்பவற்றுக்குப் பொருத்தமான தொழில் அல்லது சுயதொழில் ஒன்றில் ஈடுபட வேண்டும். அதற்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சிகளைப் பூரணப்படுத்திக் கொள்வது அவசியமாகும். இதற்கு தொழிலுலகை ஆய்வுக்குட்படுத்தி செயல்திறனுடன் கூடிய பண்பு சார் சேவையொன்றை நாட்டிற்கு வழங்க வேண்டும். எனவே எதிர்காலத்தில் தொழில் ஒன்றில் பிரவேசிப்பதற்குத் தேவையான பின்னணியைப் பெற்றுக் கொடுப்பதே இப்பாடத்தின் நோக்கமாகும்.

## 6.1 வாழ்வாதாரத் தொழிலொன்றைத் தெரிவு செய்தல்


தொழில் என்பது வெறுமனே தனிப்பட்டதொரு செயற்பாடு மட்டுமல்ல. மாறாகப் பயன் மிக்க செயற்பாட்டில் ஈடுபடல் மூலம் உற்பத்திச் செயற்பாடுகளின் பங்காளியாகி நாட்டின் அபிவிருத்திக்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பங்களிப்புச் செய்வதாகும். நீங்கள் எட்டாம் தரத்தில் வேலையுலகு பற்றிக் கற்ற விடயங்களை நினைவு கூறுங்கள். அரசதுறையில், தனியார் துறையில் அல்லது சுய முயற்சியில் உள்ள எத்தொழிலுக்காயினும் தனிப்பட்ட பெறுமதி மட்டுமன்றி சமூகப் பெறுமதியும் உண்டு. அது மட்டுமன்றி வறுமை மற்றும் சமூக முரண்பாடுகளை இல்லாமல் செய்வதற்குக்கூட இது காரணமாக அமைகின்றது. எனவே தொழிலொன்றைத் தெரிவுசெய்யும் போது மிக ஆழமான அறிவுடனும், கவனத்துடனும் செயற்பட வேண்டும்.




எந்த ஒரு தொழிலையும் ''உயர்ந்தது, தாழ்ந்தது'' என வகுத்து நோக்க முடியாது. எனினும் இவ்விடயத்தில் மிக முக்கியமாவது தமக்குப் பொருத்தமான சிறந்த ஒரு தொழிலைத் தெரிவு செய்வதும், தெரிவு செய்த தொழில் பற்றி சுய திருப்தியுடன் மற்றும் வினைத்திறனுடன் அத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதுமாகும்.

அன்று மல்வானை மகா வித்தியாலய 9 ஆம்தர மாணவர்களுக்காக ஒழுங்கு செய்யப்பட்ட ''வாழ்க்கைத் தேர்ச்சி'' தினமாகும். இந்நிகழ்வின்போது ''வாழ்வாதாரத் தொழிலொன்றைத் தேர்ந்தெடுப்போம்'' எனும் தலைப்பின்கீழ் உரை நிகழ்த்தவென விசேட பேச்சாளர் ஒருவர் அழைக்கப்பட்டிருந்தார். பல்லூடக எறியி ஒன்றைப் (Multi Media Projector) பயன்படுத்தியவாறு ஆரம்பிக்கப்பட்ட அவரின் உரை மாணவர்களின் கவனத்தை ஈர்த்ததாக விளங்கியது.

கீழே காணப்படுவது நிகழ்வின்போது திரையில் காட்சிப்படுத்தப்பட்ட படம் ஆகும்.




இளைஞர்களை வேலையுலகிற்கு வழிகாட்டல்

இப்படத்தின் மூலம் முன்வைக்கப்படும் கருத்துக்கள் பற்றிப் பேச்சாளர், மாணவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தார். பல மாணவர்கள் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். இக்கருத்துக்களுள் மிகச் சரியான விடையாக ஏற்றுக்கொள்ளப்பட்டது சமீர என்ற மாணவனின் பின்வரும் பதிலாகும்.

''வாழ்க்கை எனும் நீண்ட பயணத்தில் தொழில் ஒன்றைத் தேர்ந்தெடுப்பது ஒரு முக்கிய சக்தியாகும். நாம் இச்சந்தர்ப்பத்தில், எந்தத் திசையில், எந்த முறையில் பயணிக்க வேண்டும் என்ற வழிகாட்டல்கள் காட்சிப்படத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. நாம் இச்சக்தியை அடைய முன்னர் சுயமதிப்பீட்டின் மூலம் எமது விருப்பங்கள், திறமைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் என்பவற்றை இனங்காண வேண்டும். இதேபோன்று தொழில் ஆய்வு மற்றும் மனப்பாங்கு வளர்ச்சியை மேம்படுத்துதல் என்பன இங்கு முக்கியமாகும்.

மேலும் நாம் மேற்குறிப்பிட்ட கூற்றில் உள்ள வேலையுலகுடன் தொடர்புடைய பல்வேறுபட்ட கருத்துக்களின் பக்கம் நமது கவனத்தைச் செலுத்துவோம்.

## சுய மதிப்பீடு

அதாவது தன்னைப் பற்றிய சுயமதிப்பீடு ஒன்றின் மூலம் தனது ஆற்றல்கள், ஈடுபாடுகள், எதிர்பார்ப்புக்கள் என்பனவற்றை இனங்காண்பதாகும்.

### தனது ஆற்றல்களை இனங்காணல்




உங்கள் எதிர்காலத் தொழில் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டியவர்கள் நீங்களேயாவர். வாழ்க்கைத் தேர்ச்சி பாடத்தில் முதலாம் அலகில் நீங்கள் கற்ற விடயங்களைச் சிறிது நினைவூட்டிப் பாருங்கள். உங்களிடம் பல்வேறுபட்ட திறமை களும், ஆற்றல்களும் காணப்படுகின்றன. அத்திறமைகள் ஆற்றல்களை மிகச் சிறப்பாக உங்களால் இனங்கண்டு கொள்ள முடியும். இதற்காகப் பெற்றோர், ஆசிரியர்கள் போன்ற மூத்தோரினதும், ஏனையோரினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ளலாம். இதே போன்று சமகால பாடசாலைப் பாடவிதானத்திலும் இதற்கான வசதிகள் செய்து

கொடுக்கப்பட்டுள்ளன. செயன்முறைத் தொழினுட்பத்திறன், அழகியற் பாடங்கள், கணித விஞ்ஞானப் பாடங்கள் மற்றும் மொழி சார்ந்த பாடங்கள் போன்றன பாடவிதானத்தினுள் உட்படுத்தப்பட்டிருப்பதும், உங்களிடம் மறைந்துள்ள திறமைகளை இனங்கண்டு அவற்றை எதிர்காலத்திற்காக மேம்படுத்தும் நோக்கிலேயாகும். பாடசாலையினுள் நீங்கள் ஈடுபாடு காட்டுகின்ற இணைப்பாடவிதான மற்றும் வெளிக்களச் செயற்பாடு மூலமும் உங்களது ஆற்றல்கள் திறன்களை இனங்கண்டு அவற்றை விருத்தி செய்து கொள்வதற்கு முடியும்.

அதேபோன்று ஒருவரிடம் திறமைகள், ஆற்றல்கள் என்பன ஏற்படுவதற்கு அவரின் பரம்பரையும் செல்வாக்குச் செலுத்துகின்றது என அறிய முடிகின்றது. எனவே தன்னிடம் காணப்படுகின்ற ஆற்றல்களை மிகச்சரியாக இனங்காண்பது உங்களது எதிர்காலத் தொழில் வாழ்க்கையை வெற்றிகரமாக அமைத்துக் கொள்வதற்கு உறுதுணையாக அமைகின்றது.

## தமது ஈடுபாடுகளை இனங்காணல்

உங்கள் ஆற்றல்களை மாத்திரம் இனங்காண்பது தொழில் துறை ஒன்றைத் தெரிவு செய்துகொள்வதற்குப் போதுமானதன்று. உங்களிடம் உள்ள திறமைகளில் நீங்கள் மிகவும் விருப்பம் காட்டும் துறையினைத் தெரிவு செய்ய வேண்டும். அதாவது உங்கள் ஈடுபாட்டை மிகத் தெளிவாக இனங்காண வேண்டும். எந்தவொரு செயலையும் மிக நன்றாகச் செய்து முடிப்பதற்கு அது தொடர்பான விருப்பமும், ஆசையும் மட்டுமே இருக்க வேண்டும். தமக்கு ஈடுபாடற்ற தொழிலில் ஈடுபடுவதன்மூலம் தொழில் திருப்தியை அடைய முடியாது. எந்தவொரு தொழிலினதும் வெற்றி அல்லது தோல்வி தீர்மானிக்கப்படும்போது தொழிலாளியின் தொழில் திருப்தி முக்கியத்துவம் பெறுகிறது.

பெரும்பாலும் நீங்கள் தொழில் துறையொன்றைத் தெரிவு செய்யும்போது தற்போது மிகப் பிரசித்திபெற்றுக் காணப்படும் அல்லது அதிகமானோர் ஈடுபாடு காட்டும் தொழிற்துறைகளையே தெரிவு செய்ய விரும்பக்கூடும். ஆனால் உலக வெற்றியாளர்கள் பலர் தமது விருப்பம், ஆற்றல் என்பவற்றுக்கிடையே ஒன்றையொன்று தொடர்புபடுத்தியே தமது தொழில்களைத் தேர்ந்தெடுத்துள்ளனர். எனவே உங்கள் விருப்பத்துக்கு மட்டும் இடங்கொடுத்தோ அல்லது வேறோருவர் தெரிவு செய்தமைக்காகவோ தொழில் ஒன்றைத் தெரிவு செய்து கொள்வது பொருத்தமற்றதாகும்.

சமகாலத்தில் தொழில் தேடுநர்களின் தொழில் ஈடுபாடுகளை இனங்கண்டு கொள்வதற்கெனப் பல நுட்பவகைகள் கையாளப்படுகின்றன. ''தொழில் ஈடுபாட்டுப்

பரிசோதனை'' எனும் பரிசோதனை முறை இவற்றுள் பிரதானமானதாகும். இதனூடாக வழங்கப்படுகின்ற வினாக்கொத்துக்கு விடையளிப்பதன் மூலம் ஒருவர் மிக விருப்பம் காட்டக்கூடிய தொழிற்துறையை நன்கு இனங்கண்டு கொள்ளலாம்.

**செயற்பாடு I**

''தொழில் ஈடுபாட்டுப் பரிசோதனை'' தொடர்பாக உங்கள் ஆசிரியருடன் கலந்துரையாடி தகவல்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

## எதிர்காலத் தொழில் எதிர்பார்க்கை

நீங்கள் 9 ஆந் தர மாணவனாக இருந்த போதும் உங்களது எதிர்காலத் தொழில் தொடர்பான ஏதோ ஒரு எதிர்பார்ப்பு அல்லது கற்பனை உங்களிடம் இருக்க முடியும். சில வேளை இவ்வெதிர்பார்ப்பானது காலவோட்டத்தில் மாறவும் இடமுண்டு. சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் இவ்வெதிர்பார்க்கையானது உங்கள் திறமையுடனும் ஈடுபாடுகளுடனும் ஒத்துவருகின்றதா? சமகாலத்தில் பாடசாலையில் கற்கும் மாணவர்களில் ஒரு தொகுதியினர் உயர் கல்வியில் பிரவேசிப்பதோடு மற்றொரு தொகுதியினர் வேலையுலகுக்குள் பிரவேசிக்கின்றனர். உயர்கல்விக்குத் தெரிவுசெய்யப்படவில்லை என்ற காரணத்திற்காக மட்டும் ஒரு மாணவன் திறமையற்றவன் எனக் கருதப்பட முடியாது.

உங்கள் திறமைகளுக்கேற்ற தொழில் துறைகளை விருத்தி செய்து கொள்வதற்கான தகைமைகளைப் பூரணப்படுத்த உதவும் அரச, மற்றும் தனியார் நிறுவனங்கள் பல நாடளாவிய ரீதியில் வியாபித்துக் காணப்படுகின்றன. அந்நிறுவனங்கள் பற்றிச் சரியான அறிவைப் பெற்றிருப்பது உங்களுக்கு மிகவும் முக்கியமாகும். இது தொடர்பில் உங்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கவும், வழிகாட்டவும் தம்மை அர்ப்பணித்துள்ள உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்கள் பல இருப்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். மேலும் இவ்வாறான ஆலோசனைகள் ஊடாக நீங்கள் எதிர்பார்ப்பது போன்று உயர்கல்வி பெறுவதற்காக பல்கலைக்கழகம் நுழையும் சந்தர்ப்பமும் கிடைக்கலாம். இலங்கையில் திறந்த பல்கலைக்கழகம் போன்ற நிறுவனங்கள் இந்நோக்கிலேயே நிறுவப்பட்டுள்ளன. அவ்வாறே இலங்கையிலுள்ள எந்தவொரு பல்கலைக்கழகத்திலும் வெளிவாரி மாணவராகப் பதிவு செய்து உயர்கல்வியைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பும் காணப்படுகின்றது.


# தொழிற் பயிற்சி

தொழில் எதிர்பார்ப்புகளுக்காகத் தொழிற் பயிற்சி வழங்கப்படுவதன் முக்கிய நோக்கம் தொழிலொன்றில் ஈடுபடுவதற்குத் தேவையான அறிவு, தேர்ச் சிகள் மற்றும் ஆற்றல்களை வழங்குவதும் தொழில்கள் தொடர்பான சிறந்த மனப்பாங்கை விருத்தி செய்வதுமாகும்.

பல்வேறு தேர்ச்சிகளைத் தன்னகத்தே கொண்ட படைப்பாற்றல் மிக்கவர்களுக்கே வேலையுலகினுள் அதிக கேள்வி காணப்படுகின்றது. இக்கேள்வியானது உள் நாட்டிலும், சர்வதேச மட்டத்திலும் காணப்படுகின்றது. வேலையுலகில் பிரவேசிப் பதற்குத் தேவையான தேர்ச்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு சிறந்த வழி தொழிற்பயிற்சி பாடநெறிகளைப் பயில்வதாகும். இச்சந்தர்ப்பத்தில் மேலேயுள்ள பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று உங்கள் ஆற்றல், ஈடுபாடு, எதிர்பார்ப்பு என்பவற்றுக்குப் பொருத்தமான தொழில் ஒன்றை நோக்காகக் கொண்ட பாடநெறியொன்றைத் தெரிவு செய்வது பொருத்தமானதாகும். இவ்வாறான பாடநெறி ஒன்றைத் தெரிவு செய்யுமிடத்து இப்பாட நெறியுடன் தொடர்பான தொழில் வாய்ப்புகள் பற்றிய பின்னணித் தகவல்களை அறிந்திருப்பதும் முக்கியமாகும். அதாவது அத்துறையின் தொழிலுக்கான கேள்வி வேலையுலகில் காணப்படுகின்றதா? என்பது போன்ற விடயங்களைத் தேடிப்பார்க்க வேண்டும்.

இப்பயிற்சி நெறிகள் அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட முடியும். எனினும் மிக உயர்ந்த தரத்தையுடையதும் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றதுமான சிறந்த பயிற்சிகளை வழங்குவதை நோக்காகக் கொண்டு அரசாங்கம் தேசிய தொழிற்தகைமைச் சட்டகம் ஒன்றை அறிமுகப் படுத்தியுள்ளது. இதன்கீழ் தேசிய தொழிற்தகைமை சான்றிதழ் (NVQ) வழங்கப் படுவதுடன் இதற்கென 7 தேர்ச்சி மட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அண்மையில் அமைக்கப்பட்ட தொழினுட்பப் பல்கலைக்கழகத்தை இதன் நவீன கட்டமாக அறிமுகப்படுத்த முடியும்.

**தேசிய தொழிற்றகமைச் சட்டகம்**




தொழில் சார் மற்றும் தொழில் திறன்கள் ஆணைக்குழு TVET GUIDE 2009

தொழிற்பயிற்சி பாடநெறி தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய அரச நிறுவனங்கள் சில பின்வருமாறு

- தொழினுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்
- தேசிய பயிலுனர் மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை
- தொழிற் பயிற்சி அதிகார சபை
- தேசிய இளைஞர் சேவைகள் மன்றம்

அரச துறைக்கு மேலதிகமாக தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் அதிகம் காணப்படுகின்றன.

இவ்வாறான பாடநெறிகளைத் தெரிவு செய்யும்போது உரிய நிறுவனம் தேசிய தரத்துக்குப் பொருந்தக் கூடிய முறையில் அமைந்த நிறுவனமா? என்பதைக் கண்டறிய வேண்டும்.


## தொழிலொன்றைத் தேர்ந்தெடுத்தல்

தாம் விரும்பும் தொழிலில் பிரவேசிப்பதற்குத் தேவையான பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அத் தொழிலில் பிரவேசித்தல் அவசியமாகும். உங்கள் வாழ்க்கைத் தொழிலானது உங்கள் எதிர்கால வாழ்வின் வெற்றி தோல்வியை நிர்ணயிக்கக்கூடிய ஒரு பிரதான காரணி என்பதை நீங்கள் மறந்து விடக்கூடாது.

உங்களுக்குப் பொருத்தமான தொழிற்துறை ஒன்றைத் தெரிவு செய்யும் போது, அது தொடர்பாகத் தீர்மானம் எடுக்கப் பொருத்தமானவர் நீங்களே. எனினும் உங்களால் தனித்துத் தீர்மானம் மேற்கொள்வதற்குச் சிரமமெனில், அதற்கு உதவி செய்யக்கூடிய பலதரப்பட்ட சேவைகள் எமது நாட்டில் காணப்படுகின்றன. இவை ''தொழில் வழிகாட்டல் சேவை'' என அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன.

தொழில் வழிகாட்டல் சேவையின் பிரதான நோக்கம், மனித வளங்களை மிகப் பயன் மிக்கதாகத் தேசிய உற்பத்திக்குப் பயன்படுத்துவதாகும். இவ்வாறான நிலையங்கள் தொழில் இல்லம், பிரதேச செயலகம் மற்றும் மாகாண சபைகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. இம்மத்திய நிலையங்களில் இருந்து உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடிவதுடன், இதற்கான வழிகாட்டல்கள், ஆலோசனைகளை வழங்கக்கூடிய அதிகாரிகளும் இந்நிலையங்களில் கடமையாற்றுகின்றனர்.

தொழில் ஒன்றைத் தேடிக்கொள்வதற்கு பயன்படுத்த முடியுமான வழிமுறைகள் பல காணப்படுகின்றன அவையாவன.
அரச வர்த்தமானி அறிவித்தல்
நாளாந்த, வாராந்த செய்தித்தாள்களின் தொழில் வாய்ப்புப் பகுதி
''Jops Net'' (WWW.jobsnet.lk) என்ற இணையத்தளம்



அரச வர்த்தமானி



"Jobs Net" இணையத்தளம்




வெற்றிட விளம்பரம்

**செயற்பாடு II**

அரசவர்த்தமானி அறிவித்தல், செய்திப் பத்திரிகையின் தொழில் வாய்ப்புப் பகுதி என்பவற்றைப் பரிசீலித்து, பல்வேறு துறைகளின்கீழ் காணப்படும் தொழில்களை வகைப்படுத்துங்கள். வாய்ப்பிருந்தால் இணையத்தளத்தைப் பரிசீலனை செய்யுங்கள்.

## சுயதொழில்

''தன்னிடமுள்ள ஆற்றல்கள், விருப்பங்கள் மற்றும் வளங்களைப் பயன்படுத்தி தனக்கென சொந்தமான முயற்சியொன்றை ஆரம்பித்தல்'' சுய தொழில் என அறிமுகப்படுத்தப்படுகின்றது. எனினும் சமகாலத்தில் ''சுயதொழில்'' எனும் எண்ணக்கருவிற்குப் பதிலாக முயற்சியாண்மை என்ற எண்ணக்கரு தோன்றியுள்ளது. முயற்சியாண்மையாளர் என்பவர் சமூகத்தின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையிலும் ஆக்கத்திறன் வெளிப்படும் வகையிலும் சுயதொழிலொன்றை ஆரம்பிக்கும் நபராவார். சமகாலத்தில் காணப்படும் ஏராளமான வெற்றிகரமான வியாபாரங்கள், முயற்சியாண்மை எண்ணக் கருவினூடாகவே வெற்றி இலக்கை அடைந்துள்ளன.

''வருடத்தின் சிறந்த முயற்சியாளர்'' என்ற விருதைப் பெற்றுக் கொண்ட ஆகிப் அஹமட் அவர்கள் தனது வெற்றிக்கான இரகசியத்தை பத்திரிகை நிருபர் ஒருவருக்குப் பின்வருமாறு விபரிக்கிறார்.

''நான் உயர்தரப் பரீட்சையை முடித்துவிட்டு வீட்டிலிருக்கும் காலத் திலேயே எனது வீட்டுத் தோட்டத்தை அழகுபடுத்த வேண்டும் என்ற எண்ணம் உருவானது. நான் சாதாரண தர வகுப்பில் விவசாய பாடம் கற்றதால் இச்செயல் எனக்கு இலகுவாக இருந்தது. எனது அம்மா, அப்பா, அக்கா ஆகியோர் இவ்விடயத்தில் எனக்கு ஊக்கத்தையும், வழங்கினார்கள். நான் எமது தோட்டத்தை எனக்குத் தெரிந்த முறையில் திட்டமிட்டு அழகுபடுத்தினேன். அனைவரும் எனது வீட்டுத்தோட்டம் அழகாக உள்ளது எனப் புகழ்ந்து கூறிய போது நான் மிகவும் மகிழ்ச்சியடைந்தேன்.

இதற்கிடையிலேயே உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின. எனக்குப் பல்கலைக்கழகம் நுழைவதற்காக போதிய புள்ளிகள் கிடைக்கவில்லை. உண்மையிலேயே எனக்கு மிகவும் கவலை ஏற்பட்டது. என்றாலும் நான் நம்பிக்கை இழக்கவில்லை. எனது ஆற்றல்களைப் பயன்படுத்தி அவை மூலம் உச்சப் பயனைப் பெறவேண்டுமென எண்ணினேன். எனது பாடசாலை விவசாய ஆசிரியையின் வழிகாட்டலின் கீழ் நான் தனியார் நிறுவனமொன்றினால்

நடாத்தப்படும் ''பூங்கா அழகுபடுத்தல்'' என்ற பாடநெறியொன்றைப் பின்பற்றினேன். அதன் பின் சாதாரண கட்டணம் ஒன்றை அறவிட்டு எனக்கு அறிமுகமானவர்கள் மற்றும் உறவினர்களின் வீட்டுத் தோட்டங்களை அழகுபடுத்திக் கொடுத்தேன். அதன்மூலம் கிடைக்கப்பெற்ற பணத்தைக் கொண்டு எனக்கு அவசியமான உபகரணங்கள் பலவற்றை வாங்கிக் கொள்ள முடிந்தது. நான் கற்ற நிறுவனத்தின் ஆலோசனைப் படி எனக்கு வியாபார நிறுவ னமாக பதிவு செய்து கடன் தொகையொன்றை பெற்றுக் கொள்ள முடிந்தது. இதன் பின்னர் வரவேற்பு மண்டபங்கள், உல்லாசப் பயண விடுதிகள் போன்ற நிறுவனங்களில் தோட்ட அலங்கார வேலைகளுக்காக கட்டளைகள் எனக்குக் கிடைத்தன. ஆரம்பத்தில் எனக்கு இரவு பகல் பாராது சிரமப்பட்டு வேலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்று எனக்கு வெளிநாடுகளிலிருந்து கூட தோட்ட அலங்காரத்துக்கான கட்டளைகள் கிடைக்கப்பெறுகின்றன. இந் நாடுகளில் எனது நிறுவனத்தின் கிளைகள் காணப்படுகின்றன. அதிகமானோருக்குத் தொழில்வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கவும் முடிந்துள்ளது.



உரு 6.4

இவ்விருது எனது முயற்சிக்கும் அர்ப்பணிப்புக்கும் கிடைத்த பெறுமதி மிக்க மதிப்பீடு என நான் எண்ணுகிறேன்.

**செயற்பாடு III**

மேற்கூறப்பட்ட சம்பவத்தை நன்கு வாசித்து முயற்சியாண்மையாளர் என்ற வகையில் வெற்றியடைவதற்கு ஆகிப் அஹமட் இடம் காணப்பட்ட விசேட குணாம்சங்களைப் பட்டியற்படுத்துங்கள்.

## 6.2 தொழில் அபிவிருத்திக்கான வழிமுறைகள்

சுயதொழில் அல்லது வேறு எந்தவொரு தொழில் ஊடாகவும் வேலையுலகத்திற்குப் பிரவேசிப்பவர் தொழிலாளர் எனக் கருதப்படுகின்றனர். தொழிலாளர் ஒருவர் சிறந்ததொரு தொழிலாளராக மிளிர பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அவற்றைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

### சிறந்த மன ஒற்றுமையும் அர்ப்பணிப்பும்

தான் மேற்கொள்கின்ற எந்தவொரு காரியத்தையும் மன ஒருமைப் பாட்டுடனும் அர்ப்பணிப்புடனும் மேற்கொள்ள வேண்டும். இன்று செய்ய வேண்டிய பணியை நாளை செய்யலாம் எனக் காலந்தாழ்த்தாது, கிடைக்கின்ற வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி உரிய காரியத்தை நிறைவேற்றுவது சிறந்த தொழிலாளரின் பண்பாகும். அவ்வாறே தம்மால் செய்யப்படுகின்ற காரியங்களின் தரத்தைப் பேணிப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துவதும் முக்கியமாகும்.

### தொழில் திருப்தியை ஏற்படுத்திக் கொள்ளல்

தனது தொழில் மற்றும் தொழில் நிலையம் தொடர்பாக சிறந்த மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்வதானது தொழிலொன்றை வெற்றியடையச் செய்வதில் செல்வாக்குச் செலுத்துகின்றது. தான் செய்கின்ற தொழிலைத் தினமும் விமர்சித்துக் கொண்டு வேறு தொழில்கள் தொடர்பான கற்பனையில் இருப்போர் இன்று சமூகத்தில் ஏராளமாக உள்ளனர். இவர்கள் ஒருபோதும் சிறந்ததொரு தொழிலாளராக வர முடியாது. தனது தொழில் மற்றும் அதன் பின்னணிகளை சிறப்பாகவும், மகிழ்ச்சிகரமாகவும் வைத்துக் கொள்ளும் திறமை கொண்டவரே தனது தொழில் தொடர்பான சிறந்த மனப்பாங்குடன் கூடிய ஆத்ம திருப்தியுடன் தனது தொழிலை நிறைவேற்றுவார்.

### சேவை வழங்குனர்களின் தேவைகளை நிறைவேற்றல்

வேலையுலகினுள் நுழைகின்ற சகலருக்கும், வேலையுலகை இயக்குகின்ற நபர்களின், அதாவது சேவை வழங்குனர்களின் தேவைகளை நிறைவேற்றுவது இன்றியமையாததாகும். அவ்வாறின்றேல் பல்வேறு பிரச்சினைகள் தோன்றக்கூடும். சேவை வழங்குனர்கள் எப்போதும் பொறுப்புடன் தமது கடமைகளை நிறைவேற்றுகின்ற, நிறுவனத்துக்கு விசுவாசமான நேர்மையான காரிய சித்தியுடைய ஒழுக்கமுள்ள தொழிலாளர்களையே விரும்புகின்றனர். இதே போன்று பொது நோக்கமுள்ள நிறுவனத்தின் தேவைகளைச் சிறப்பாக நிறைவேற்றுகின்ற

தொழிலாளர்களே அந்நிறுவனத்திற்கு மிகவும் வேண்டப் பட்டவர்களாகவும் மாறுகின்றனர்.

### சேவை பெறுநர்களின் தேவைகளைத் திருப்திப்படுத்தல்

வேலை உலகில் முயற்சியாளர் ஒருவர் பிரதானமாக பண்டங்கள் மற்றும் சேவைகளின் உற்பத்தியூடாக மக்களின் தேவைகளை நிறைவேற்றுபவராவார். இங்கு வாடிக்கையாளர்களின் தேவைகளைச் சரியாக நிறைவேற்ற முடியாத நிறுவனம் பயனுறுதி வாய்ந்த நிறுவனமாக மாட்டாது. பண்டத்தின் அல்லது சேவையின் தரம் என்பது நுகர்வோனின் தேவைக்கு ஏற்ப தரமாக, உரிய நேரத்திற்கு அப்பொருளை அல்லது சேவையை வழங்குவதாகும். இச்செயலை நிறைவேற்ற முடியுமான நபரே பயனுறுதியுள்ள தொழிலாளர் ஆவார்.

## 6.3 செயற்றிறன் மற்றும் பயனுறுதி

செயற்றிறன் மற்றும் பயனுறுதி என்பன இன்றைய வேலை உலகில் அதிகமாகப் பயன்படுத்துகின்ற இரு எண்ணக்கருக்களாகும்.

- செயற்றிறன் என்பது ‘‘ கிடைக்கப் பெறுகின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி ஒரு பொருளை உற்பத்தி செய்தல் அல்லது ஒரு சேவையை வழங்குவதாகும்’’
- பயனுறுதி என்பது அதிக செயற்றிறனுடன் செயற்பட்டு நிறுவனத்தின் நோக்கம் மற்றும் அதனுடன் தொடர்பான தேவைகளை அடைந்து கொள்வதாகும்.

ஒரு நிறுவனத்தின் பயனுறுதியானது அங்கு கடமையில் ஈடுபடுகின்ற தொழிலாளர்களின் வினைத்திறனிலும் (செயற்றிறன்) நிறுவன முகாமைத்துவத்தின் செயற்றிறனிலும் தங்கி இருக்கின்றது.

தொழிலாளர்களின் செயற்றிறன் மற்றும் பயனுறுதியை மேம்படுத்துவதற்கு கீழ்வரும் விடயங்கள் உதவியாக அமைகின்றன.

- தனது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளும் நோக்குடன் கடமை புரியும் அதே வேளை பயிற்சிகளிலும் ஈடுபடல்.

- சம காலத்தில் எந்தவொரு வேலையினையும் அவசரமாகவும், சரியாகவும் செய்வதற்கு கணினிப் பாவனை தொடர்பான அறிவு மிக முக்கியமானதாகும். மேலும் ஆங்கில மொழி தொடர்பான ஆற்றலையும் வளர்த்துக் கொள்வதன் மூலமாகவே, தான் செய்கின்ற காரியங்களை மிகவும் பயனுறுதியுடன் செய்வதற்கு ஆற்றல் கிடைக்கும்.


## 2009 தேசிய தகவல் தொழினுட்பம் மற்றும் ஆங்கில கல்வியாண்டு (Year of ICT & English Education)

- தொழில் ஆய்வு மற்றும் பகுப்பாய்வுகளில் ஈடுபடுவதன் மூலம், தான் செய்கின்ற கருமங்களை மிகச் சிறப்பாகவும், செயற்றிறனுடனும் செய்ய முடியுமான வழிமுறைகள் தொடர்பாக அறிவினைப் பெற முடியும்.

- பெற்றுக் கொள்கின்ற சம்பளத்தை விட தான் செய்கின்ற செயலின் தரம் தொடர்பாகக் கூடிய கவனம் எடுத்தல் வேண்டும்.


- திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான ஐந்து எஸ் (5S) எண்ணக்கரு போன்ற முறைகள் தொடர்பாக அறிந்து கொள்வதன் மூலமாகவும் அவற்றை பூரணமாகப் பின்பற்றுவதன் மூலமாகவும் ஒரு நிறுவனம் செயல்திறன்மிக்கதாகச் செயற்பட உதவ முடியும். ஜப்பானின் 5S எண்ணக்கருவானது நிறுவனங்களின் செயல்திறனை மேம்படுத்துவதற்கென சமகாலத்தில் பயன்படுத்தப்படும் ஒரு செயன்முறையாகும்.

### ஜப்பானின் 5S எண்ணக்கரு பின்வருமாறு




| | |
|---|---|
| தேர்ந்தெடுத்தல் | அனாவசியமானவற்றை நீக்குதல் |
| ஒழுங்குபடுத்தல் | அவசியமானவற்றை ஒழுங்குமுறையில் வைத்தல் |
| சுத்தம் பேணுதல் | வேலைசெய்யும் சூழலை அழுக்கின்றிப் பேணுதல் |
| ஒழுங்குகளைப் பின்பற்றல் | நிறுவனத்தின் ஒழுங்கு மற்றும் சுத்தத்தினைத் தொடர்ந்து பாதுகாத்தல் |
| சுய கட்டுபாடு | இச்சட்டதிட்டங்களையும் ஒழுங்குகளையும் வாழ்நாள் முழுதும் கடைப்பிடித்தல் |

திட்டமிட்ட முகாமைத்துவமானது ஒரு நிறுவனத்தின் செயல்திறனில் பாரிய செல்வாக்கைச் செலுத்துகின்றது. நிறுவனத்தின் முகாமையாளர்கள் ஒழுங்கமைப்புடனும், திட்டமிட்ட அடிப்படையிலும் செயற்படுவது, நிறுவனத்தின் செயல்திறனை மேம்படுத்தக் காரணமாகின்றது. அவ்வாறே ஊழியர் நலன்புரி நடவடிக்கைகளும், நிறுவனத்தின் செயல்திறன் மேம்பாட்டில் பங்களிப்புச் செய்யும் முக்கிய காரணிகளாகும்.




## செயற்பாடு

நிறுவனமொன்றின் செயற்றிறனை அதிகரிப்பதற்கு பயன்படுத்த முடியுமான முறைமை தொடர்பாக (சிந்தனைக் கிளர்வு) கலந்துரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள்.

***சாராம்சம்***

- சமகால வேலை உலகானது விரிவாக வியாபித்துக் காணப்படுகின்றது.

- வேலை உலகிற்குள் பிரவேசிக்கின்ற ஒருவர் வேலை உலகினுள் காணப்படுகின்ற பல்வேறுபட்ட தொழில்கள் தொடர்பாக அறிந்திருத்தல் மிக முக்கியமானதாகும்.

- தொழில் துறை ஒன்றைத் தேர்ந்தெடுக்கும்போது தனது ஈடுபாடு, ஆற்றல்கள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

- தொழில் ஒன்றுக்குத் தேவையான அடிப்படைத் தேர்ச்சியைப் பெறுவதற்கு தொழிற்பயிற்சி மிக முக்கியமாகும்.

- தொழிற் பயிற்சியினை மிகப் பயனுள்ளதாக்குவதற்கு அரசின் மூலம் விசேட நிறுவனச் சட்டகம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

- ஒரு நிறுவனத்தின் செயற்றிறன் மேம்பாட்டிற்கு அந் நிறுவனத்தினால் வேலை கொள்வோர், வேலை செய்வோர் ஆகிய இரு பாலாரினதும் ஒத்துழைப்பு மிக அவசியமாகும்.

***ஒப்படை***

தொழில் வழிகாட்டல் அலகு ஒன்றில் கண்காட்சிப்படுத்துவதற்காக **''உமக்கு ஒரு தொழில் - நாட்டுக்கொரு சேவை''** என்ற கருத்துப்பட சுவரொட்டியொன்றைத் தயாரிக்கவும். தொழில் துறை ஒன்றைத் தெரிவு செய்யும்போது அவசியமான அனைத்து விடயங்களும் இதில் உள்ளடக்கப்பட்டிருத்தல் அவசியம்.